

## உங்கள் பிள்ளையின் சுற்றாடல்

உங்கள் அயலாரை கவனத்திலெடுங்கள். உங்கள் சுற்றாடல் பாதுகாப்பானதா? நீங்களோ உங்கள் குடும்பமோ ஏதும் வன்முறைகளுக்கோ அல்லது ஆக்கினைகளுக்கோ இலக்காக இருக்கிறீர்களா? ஏதாவது ஆபத்து ஏற்படின் அயலாரை உதவிக்கு அழைக்கும் வசதி உங்கள் பிள்ளைக்கு உண்டா? சுற்றாடலின் பாதுகாப்பு பற்றி ஏதாவது நம்பிக்கையின்மை இருப்பின் பிள்ளையை கண்காணிப்பின்றி தனியாக விடுவது உகந்ததல்ல.

உங்கள் வீடு பாதுகாப்பானதா? உங்கள் பிள்ளையை தனியே விடுமுன் அவசர தொடர்பு தொலைபேசி இலக்கங்களையும் உடனடி உதவி வழங்கக்கூடிய ஒரு முதியவரின் தொலைபேசி இலக்கத்தையும் கொடுத்து வையுங்கள். காபனொர் ஒட்சைட்வாயு, புகை என்பவை வெளியேறின் அதை கண்டு பிடிக்கும் கருவி முறையாக வேலை செய்கிறதா என்பதை நிச்சயம் செய்து கொள்வதும், தீ விபத்தேற்படின் உடனடியாக வெளியேறுவதற்கான ஒத்திகை ஒன்றை பழக்கி வைப்பதும் பிள்ளையின் பாதுகாப்பை நிச்சயப்படுத்தும்.

நச்சுப்பொருட்கள், திறந்த நிலையில் ஆயுதங்கள், வெளியே தொங்கிக் கொண்டிருக்கும் மின்சாரவயர்கள் மற்றும் ஆபத்துகள் அற்ற பாதுகாப்பான நிலையில் வீட்டை வைக்கவும்.

வீட்டுப்பாவனைப் பொருட்களைப் பாவிப்பது பற்றி கடுமையான நிபந்தனைகள் விதியுங்கள். எத்தனை வயதில் உங்கள் பிள்ளை மின்சார அடுப்பு, இஸ்திரிப்பெட்டி போன்ற சுடக்கூடிய பொருட்களைப் பாவிக்கலாம் என்பதை நீங்கள் தீர்மானியுங்கள். சில மணி நேரங்களுக்கு தனியாக இருக்கக்கூடிய பிள்ளை சமையல் செய்யவோ, மைகரோவேவ் பாவிக்கவோ வேண்டிய அளவுக்கு பொறுப்புணர்ச்சியுடையவராக இருக்கக்கூடும் என்பதற்கில்லை.

## எமது பணி

பிள்ளைகளைப் பாதுகாப்பதும்
அவர்களினதும் குடும்பத்தாரினதும்
நன்மைகளுக்காக
அவர்களைப் பலப்படுத்துவதும்
ஆதரவளிப்பதுமாகும்

## எமது நோக்கு

பேணப்படும் பிள்ளைகள்
ஆதரவளிக்கும் குடும்பங்கள்
கரிசனையுள்ள சுற்றாடல்

Peel Children's Aid

8 Nelson Street W., Suite 204
Brampton, ON  L6X 4J2
தொலைபேசி 905-796-2121
தொலைநகல் 905-796-2293

101 Queensway W., Suite 625
Mississauga, ON  L5B 2P7
தொலைபேசி 905-275-7444
தொலைநகல் 905-275-1600

www.peelcas.org

Peel Children's Aid

# தனியாக வீட்டில்

## பிள்ளைகள் எப்போது தனியாக இருக்கலாம் ?



# பிள்ளைகள் தனியாக வீட்டில் இருக்கும் போது

பிள்ளைகளை எப்போது இல்லங்களில் சிறிது நேரத்துக்கு தனியாக விடலாம் என்று தீர்மானிப்பது பெற்றோர் எடுக்கும் தீர்மானங்களுள் முக்கியமானதொன்றாகும்.

(*The Child and Family Services Act*) <u>சிறுவர் குடும்ப சேவையினரின் தீர்மானத்தின்</u> படி 10 வயதுக்குட்பட்ட பிள்ளைகளை தனியே விடலாகாது. 10 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் சகல சந்தர்ப்பங்களிலும் பாதுகாப்பாக இருக்கிறார்கள் என்பதை உறுதி செய்வது சட்டப்படி பெற்றோரின் பொறுப்பாகும். பாலகர் சிறுவர் ஆகியோர் எப்பொழுதும் நேரடிக் கண்காணிப்புக்குட்பட்டவராக இருக்க வேண்டும். எவ்வாறாயினும், அவ்வப்போது ஒரு சில பெற்றோர் வெளியே தபால் பெட்டியில் கடிதங்களை எடுப்பதற்கோ, அல்லது தெருக்கோடியில் உள்ள கடைகளுக்கோ தம் 8 அல்லது 9 வயது பிள்ளைகளை தனியாக விட்டுச் செல்வது பீல் குழந்தைகள் காப்பகத்தைச் சேர்ந்த எமக்குத் தெரிந்த விடயமாகும். பிள்ளைகள் தனியாக இருக்கும் வேளைகளில் அவசரகால நிலமையில் எவ்வாறு செயல்பட வேண்டும் என்று அவர்களைத் தயார் படுத்த வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுவது மட்டுமன்றி தம் பிள்ளைகளின் முதிர்ச்சி பற்றியும் பொறுப்புணர்ச்சி பற்றியும் பிள்ளைகளை தனியே விடும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் சிந்திக்க வேண்டும்.

10 வயதுக்கு பின்னரும் கூட 16 வயதுவரை பிள்ளைகளை கவனிக்க முறையான வழி வகுக்க வேண்டியது சட்டப்படி பெற்றோரின் பொறுப்பாகும். இந்த சட்டதிட்டங்கள் பெற்றோர் பிள்ளைகளின் கவனிப்பு பற்றி முக்கிய முடிவுகள் எடுக்க உதவியாக உள்ளது. ஒரு பிள்ளையின் வயதை வைத்து அதன் முதிர்ச்சியையோ, பொறுப்புணர்ச்சியையோ கணிப்பிட முடியாது எள்பதை பெற்றோர் நினைவில் வைத்திருக்க வேண்டும். சில 10 வயது பிள்ளைகள் கொஞ்ச நேரத்திற்கு தம்மைத் தாம் கவனிக்கக் கூடியவர்களாக இருப்பர். சிலர் அதே வயதிலோ அல்லது அதைவிடச் சிறிது கூடிய வயதிலோ கூட தம்மை தாம் கவனிக்க முடியாதவர்களாக இருப்பர். எந்தப்பருவத்தில் எப்போது எவ்வளவு நேரத்துக்கு பிள்ளைகளை தனியாக விடலாம் என்பதை பெற்றோர் தீர்மானிக்க வேண்டும்.

பிள்ளைகளை தனியாக விட தீர்மானிக்கும் போது சிந்திக்கவேண்டிய சில விடயங்கள்.

## உங்கள் பிள்ளையின் திறமை

தன்னைத்தான் கவனிக்கும் திறமை பிள்ளையிடம் காணக்கூடியதாக இருந்ததா? அவர்களுக்கு தானாக உடை மாற்ற முடியுமா பாதுகாப்பான விடயங்களை அறிந்து அதில் ஈடுபடத் தெரியுமா கட்டளைகளை ஞாபகத்தில் வைத்து பின் பற்றுவார்களா, உடமைகளை பாதுகாப்பார்கள் என நம்ப முடியுமா?

பிள்ளையிடம் நியாயமான தன்மை தென்படுகிறதா, மற்றும் பிரச்சினைகளை சுயமாக தீர்க்கும் அனுபவம் உண்டா?

குளியலறைக்குச் செல்தல், உதவி தேவைப்படின் யாரையும் அழைத்தல், அவசரகால நிலமையில் வீட்டை விட்டு வெளியேறுதல் போன்றவற்றை செய்ய முடியாதவாறு விசேட தேவைகள் ஏதும் பிள்ளைக்கு உண்டா?

பிள்ளை தனியாக விடப்பட்டால் பிரச்சினை ஏற்படக்கூடியவாறு நடக்கக்கூடும்படியான நடத்தைப் பிரச்சினை ஏதும் உங்களாலோ, பாடசாலையிலோ, அல்லது வைத்தியராலோ இனங்காணப்பட்டதா? உதாரணமாக கண்காணிப்பு இல்லாத போது தம்மைத்தாமே காயப்படுத்திக் கொள்ளுதல், ஆத்திரப்படுதல், தீ மூட்டுதல், வீட்டை விட்டு அலைதல், உடமைகளை அழித்தல், அல்லது மனதை திசைதிருப்பி அறிவுரைகளையும் கட்டளைகளையும் நிறைவேற்றாமை போன்ற குணாதிசயங்களை உடையவர்கள் தமக்கும் பிறருக்கும் ஆபத்தை விளைவிப்பார்கள்.

பாடசாலையில் தனிமைப்படுத்தப்பட்டு ஒரு உதவியாளராலோ அல்லது உதவி ஆசிரியராலோ கற்பிக்கப்படும் ஒரு பிள்ளையாக இருந்தால் அவரை கண்காணிப்பின்றி தனியே விடுவது புத்தியல்ல.

பிள்ளைகளை தனியாக விடும் போது எவ்வளவு நேரம் தனியாக விடப்படுகிறார்கள் என்பதை கணக்கில் கொள்ள வேண்டும். நீண்ட நேரமாக இருப்பின் கடமைகள் அதிகரிக்கும் பட்சத்தில் அவரகளுக்கு அதை நிறைவேற்ற முதிர்ச்சியும் திறமையும் தேவை. 14-16 வயதுப்பிள்ளைகளக் கூட முறையான பாதுகாப்புத் திட்டமின்றி தனியாக நீண்ட நாட்களுக்கோ சில மணித்தியாலங்களுக்கோ விடக்கூடாது.

## உங்கள் பிள்ளையின் எதிர் செயலாற்று திறன்:

பிள்ளையைத் தனியாக விடுமுன் அது எவ்வாறு நிலமையை ஏற்றுக் கொள்ளுகிறது என்று பாருங்கள். அவர்கள் பயப்படுகின்றார்களா அல்லது தைரியத்துடன் நிலைமையைக் கையாளுவார்களா என்று கேளுங்கள்.

இக்கட்டான வேளைகளில் எவ்வாறு உங்கள் பிள்ளை அந்நிலைமையை சமாளித்தது என சிந்தியுங்கள். கடந்த காலங்களில் கஸ்டமான அல்லது பயமான சந்தர்ப்பங்களை எவ்வாறு கையாண்டது? தனியாக இருக்கும் போது அப்படியான நிலைமை ஏற்படின் வேறு விதமாக நிலைமையை கையாளுமா?

## உங்கள் பொறுப்பு

16 வயது வரை பிள்ளைகளுக்கு நீங்கள் தான் பொறுப்பாளிகளாவர். தினமும் நீங்கள் அவர்களைக் கவனிப்பதால் எப்போது அவர்களைத் தனியாக விடலாம் எவ்வளவு நேரத்துக்கு விடலாம் என்பதை உறுதிப்படுத்த பெற்றோராகிய நீங்களே சிறந்த அனுபவசாலிகள்.

உங்கள் பிள்ளை தனியாக வீட்டில் உள்ள வேளையில் உங்களைத் தொடர்பு கொள்ளும்படியாக ஒரு நம்பிக்கையானதும் தெளிவானதுமான வழி இருக்க வேண்டும். அவசரமான நிலைமையில் நீங்கள் உடனடியாக உதவக்கூடியதாக இருக்க வேண்டும் அல்லது பொறுப்பான இன்னொரு முதியவரை உதவக்கூடியதாக ஒழுங்கு செய்ய வேண்டும். உங்கள் பிள்ளை பாதுகாப்பாகவும் சுகமாகவும் உள்ளதா என அடிக்கடி தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளுங்கள்.

தீ, வெள்ளம், சுகயீனம் போன்ற எந்த அவசரமான நிலைமையாயினும் அச் சந்தர்ப்பத்தில் அதை கையாள உங்கள் பிள்ளையினால் முடியுமா என்று திட்டவட்டமாக அறிந்து கொள்ளுங்கள்.

நீங்கள் வீட்டில் இல்லாத போது யாராவது கதவைத் தட்டினாலோ தொலைபேசியில் அழைத்தாலோ என்ன செய்ய வேண்டும் என்பதை தெளிவாகக் கூறுங்கள்.

கண்காணிப்பின்றி தனியாக உள்ள வேளையில் நண்பர்கள் வரலாமா இல்லையா அல்லது எப்போது வரலாம் என்பது பற்றி சில தெளிவான ஒழுங்கு முறைகளை நீங்கள் தயார் செய்ய வேண்டும்.

குடும்பச்சச்சரவுகளினால் பிரிவு, இடமாற்றம், குடும்ப அங்கத்தவர் ஒருவருடைய மரணம் போன்ற வேளைகள் பிள்ளைகளை தனியாக விடத் தொடங்குவதற்குரிய நேரமல்ல.

சித்திரை 2003